# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1447/15 - 2006 මැයි 31 වැනි බදාදා - 2006.05.31

*1447/15 ஆம் இலக்கம் – 2006 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/78*

### *1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரோஹித்த போகொல்லாகம,<br>
தொழில் முயற்சி அபிவிருத்தி,<br>
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,<br>
*2006, மே 16.*

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்கு விதிகள் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் "சபை" என அழைக்கப்படும்) இலங்கை முதலீட்டுச் சபை 2002, யூன் 28 ஆந் தேதிய 1242/ 29 ஆம் இலக்க, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகளினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டு ஒற்றோபர் 31 ஆந் தேதிய 8/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, அங்ஙனம் செய்தல் அவசியமானதென அது கருதுமிடத்து, சொல்லப்பட்ட சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் தொழில் முயற்சியொன்றுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் இவ்வொழுங்கு விதியில் சொல்லப்பட்டுள்ள அல்லது பாகம் 'அ' அல்லது பாகம் 'ஆ' அல்லது பாகம் 'இ' இல் தரப்பட்டுள்ள எவையேனும் ஏற்பாடுகளைச் சேர்க்கலாம்.

(2) அத்தகைய பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு சபையினால் முறையே கஷ்டமற்ற அல்லது கஷ்ட அல்லது அதி கஷ்ட பிரதேசமாகப் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் பிரதேசத்தினுள் பொறுப்பு முயற்சியொன்றை நிறுவும் தொழில் முயற்சியொன்று தொடர்பில் பாகம் 'அ' அல்லது பாகம் 'ஆ' அல்லது பாகம் 'இ' இன் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

3. கீழே வழங்கப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி முடிவடைந்ததன் மேல், வருமான வரியிலிருந்து தொழில் முயற்சியின் இலாபங்களும் வருமானமும் அவ்வாறு விலக்களிக்கப்பட்ட ஆண்டின் கடைசித் திகதியை உடனடுத்து வரும் இரண்டு ஆண்டுகள் கொண்ட மேலதிகக் காலப்பகுதிக்கு, பாகம் 'அ', பாகம் 'ஆ' அல்லது பாகம் 'இ' இல் குறிப்பிடப்பட்ட ஏதுமொரு தொழில் முயற்சி, அதன் இலாபங்களும் வருமானமும் தொடர்பில் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும் எனப் பத்து வீதப்படியான (10%) வருமானவரி செலுத்தப் பொறுப்புடையதாதல் வேண்டும். அதன் பின்னர், (ஏதேனும் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழில் அல்லது ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு சேவையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியொன்று தவிர்ந்த) அத்தகைய தொழில்முயற்சி ஏதுமொரு மதிப்பீட்டாண்டு தொடர்பில் இருபது (20%) வீதப்படியான வருமானவரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும். ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழில் அல்லது ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியொன்று ஏதுமொரு மதிப்பீட்டாண்டு தொடர்பில் பதினைந்து (15%) வீதப்படியான வருமானவரி அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

4. 'அ' பாகத்தின் விடயங்கள் 1 முதல் 9 வரை 'ஆ' பாகத்தின் விடயங்கள் 1 முதல் 9 வரை மற்றும் 'இ' பாகத்தின் விடயங்கள் 1 முதல் 9 வரை குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த முதலீடானது ஏதுமொரு கட்டிடத்தைக் கொள்வனவு செய்தல் அல்லது நிர்மாணித்தல் அல்லது ஏதாவது இயந்திரத்தொகுதி, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

5. ஏதேனும் தொழில்முயற்சியினால் இலங்கையில் செய்து முடிக்கப்பட்ட சகல மெருகூட்டப்பட்ட உற்பத்திப் பொருட்களின் விற்பனை தொடர்பாக, சுங்கத் தீர்வை இன்றி தொழில்முயற்சியினால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டனவும், அத்தகைய செய்து முடிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் அல்லது அவற்றின் கூட்டுறுப்பின் உற்பத்தி, தயாரிப்பு மற்றும் பதனிடலில் பயன்படுத்தப்படு வனவுமான (மூலப் பொருட்கள், அரைவாசி செய்து முடித்த உற்பத்திப் பொருட்கள் அல்லது வேறு எவையேனும் உள்ளீட்டுப் பொருட்களாக இருக்கும்) எல்லாப் பொருட்கள் மீதும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி சுங்கத்தீர்வைகள் விதிக்கப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும்.

6. இந்த ஒழுங்கு விதியின் நோக்கங்களுக்காக –

"கமத்தொழில்" என்பது ஏதேனும் விவரணத்தினாலான தாவரங்களைக் காணியில் பயிர்செய்தல், மீன்வளர்த்தல் அல்லது பதனிடுதல், முன்னேறிய தொழில்நுட்பம், விநியோகம், சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல், கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட கமச்செய்கை, குளிரூட்டப்பட்ட அறைகள், பனிக்கட்டி, இயந்திரத் தொகுதிகள், பாற்பண்ணை, கோழி மற்றும் விலங்கு வேளாண்மை அத்துடன் பிற பயிர்ச்செய்கையாளர் திட்டங்கள், பயிர்கள் மற்றும் நாற்றுமேடை மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் கருந்தேயிலை பதனிடுவதைத் தவிர்ந்த அறுவடைக்கு முந்திய மற்றும் பிந்திய முகாமைத்துவத்துக்காகப் பாவிக்கப்படும் முன்னேறிய தொழில்நுட்பம் என்பவற்றை உள்ளடங்கும் ;

"தற்போதுள்ள தொழில்முயற்சி" என்பது புதியதொரு தொழில்முயற்சியல்லாத ஒரு தொழில் முயற்சி எனப்பொருள்படும்;

"பொருட்கள்" என்பது உணவு மற்றும் மென்பானங்கள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள், கடதாசி, கடதாசிப் பொருட்கள், அச்சடித்தல் மற்றும் பிரசுரித்தல், இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாஸ்டிக், உலோகமல்லாத கனிப்பொருட்கள், வட்டுச் சேர்க்கப்பட்ட உலோகம், கைத்தொழில் உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் தொகையாகக் கருந்தேயிலை தவிர்ந்த படகு மற்றும் மீன்பிடிச் சாதனங்களின் உற்பத்தி கிரேப் இறப்பர், சீட் இறப்பர், கழிவு இறப்பர், (தொடர்ச்சியான தன்னியக்கச் செய்முறைத் தொழில்நுட்பச் செயற்பாட்டைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டதும் தர உத்தரவாதத்துடன் சந்தைப்படுத்தப்படுவதுமான உலர்த்திய தேங்காய் தவிர்ந்த) உலர்த்திய தேங்காய், கொப்பறா, உடன்தேங்காய், தென்னந்தும்பு அல்லது சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு வியாபாரப் பொருள் உள்ளிட்டது எனப் பொருள்படும் ;

"உண்ணாட்டரசிறைச் சட்டம்" என்பது 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருளாவதுடன் அதனிடத்தில் சட்டமாக்கப்படக்கூடிய ஏதேனும் சட்டத்தையும் உள்ளடக்குதல் வேண்டும் ;

"புதிய தொழில்முயற்சி" என்பது முழுமையானதொரு புதிய தொழில்முயற்சி என்பதோடு தற்போதுள்ள வியாபாரம் ஒன்றை மறுசீரமைப்பதையோ அல்லது இலங்கையினுள் உள்ள ஏதும் ஒரு விவரணத்திலான தொழில்முயற்சி

யொன்றின் சொத்துக்களைக் கைமாற்றுவதையோ ஈடுபடுத்தாது எனப் பொருள்படும். நலிவடைந்த கைத்தொழில் ஒன்றைக் கையேற்கும் விடயத்தில் கையேற்கப்பட்ட சொத்து மறுசீரமைப்பாகும் எனக் கணிக்கப்படமாட்டாது.

"சேவைகள்" என்பது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயற்படு சேவைகள் வர்த்தகச் செயற்பாட்டுப் புறவளக் கைத்தொழில் ; புறப்பயிற் செய்கையாளர் திட்டங்களைப் பயன்படுத்தி உள்ளூர் தயாரிப்பைப் பெறுவதற்கான சேகரிப்பு நிலையங்கள் ; உல்லாசப் பயணம் மற்றும் பொழுதுபோக்கு ; ஆடைகள் துவைத்தல் மற்றும் மெருகூட்டல் இயந்திரத் தொகுதிகளை உள்ளிட்ட ஏற்றுமதி சார்ந்த சேவைகள் உடுபுடவைத் துறை தொடர்பான (மறைமுகமான ஏற்றுமதிகள்) ; சித்திரப் பின்னல் சேவைகள் ; புடவை சாயமிடுதல் மற்றும் மெருகூட்டல் இயந்திரத் தொகுதி ; புடவை அச்சடித்தல் ; புடவையினைப் பரிசோதித்தல் ; தைத்த ஆடைகள் மற்றும் ஏனைய கைத்தொழில்களுக் கான கணனி சார்ந்த வடிவமைப்புக்கள், தைத்த ஆடைகளைக் காற்றுப் புகாவண்ணம் அடைத்தல் அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் சேவை என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

"நலிவடைந்த கைத்தொழில்" என்பது சபைக்கு விண்ணப்பித்த திகதியிலிருந்து வரும் கடைசி மதிப்பீட்டாண்டுக்கு உடன் முந்திய இரண்டு (02) ஆண்டுக்காலப்பகுதியொன்றில் தொடர்ச்சியாக ஏதுமொரு மதிப்பீட்டாண்டில் அதன் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக இலாபம் எதனையும் ஈட்டாத அல்லது விண்ணப்ப தேதிக்கு முன்பதாக குறைந்த பட்சம் ஆறு (06) மாதங்களுக்குச் செயற்படாத ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சி எனப் பொருள்படும்.

பாகம் "அ"

1 முதல் 9 வரையான விடயங்கள், சபையினால் கஷ்டமற்ற பிரதேசமொன்றென வகுக்கப்படும் (கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைத் தவிர்ந்த) ஏதுமொரு பிரதேச செயலகப் பிரிவுப் பிரதேசமொன்றில் பொறுப்பு முயற்சியொன்றை நிறுவும் தொழில் முயற்சியொன்றுக்கு மாத்திரம் ஏற்புடைத்தாகும்.

1. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் கீழே நிரை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய எண்ணிக்கையிலான உள்நாட்டு ஆட்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்குவதோடு (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தியை அல்லது சேவைகள் வழங்கலை மேற்கொள்ளும் பொறுப்பு முயற்சியொன்றினை நடாத்தும் புதியதொரு தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| நிரை I<br>தொழிலாளர் எண்ணிக்கை | நிரை II<br>விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|
| 200 மற்றும் அதற்கு மேல் | 05 ஆண்டுகள் |
| 100 – 199 | 03 ஆண்டுகள் |
| 50 – 99 | 02 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

2. முப்பது மில்லியன் ரூபாவுக்குக் (ரூபா 30,00,000) குறையாத முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் உள்நாட்டுச் சந்தைக்காக (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்காக நலிவடைந்துள்ள கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலில் தற்கால எண்ணிக்கையிலான ஊழியர்களைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துதல் அல்லது இருநூறுக்குக் (200) குறையாத உள்நாட்டு ஆட்களைத் தொழிலில் அமர்த்தல் ஆகிய இவற்றுள்

எது அதிகமோ அத்தகைய எண்ணிக்கையுடன் புதிய தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் மூன்று (03) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமான வரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறிவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

3. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருநூறு (200) அல்லது அதற்குக் கூடிய உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி தைத்த ஆடைகள் உற்பத்திக்கானதொரு பொறுப்பு முயற்சியை மேற்கொள்ளும் மற்றும் அதன் உற்பத்திகளில் எண்பது சதவீதத்துக்குக் (80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் ஐந்து (05) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

4. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருநூறு (200) அல்லது அதற்குக் கூடிய உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்கான நலிவடைந்துள்ள கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் கைத்தொழில் பொருள் உற்பத்தியாயின் அதன் உற்பத்தியில் எண்பது சதவீதத்துக்குக் (80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் அல்லது சேவைகளை வழங்குவதாயின் எழுபது சதவீதத்துக்கு (70%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் ஐந்து (05) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

5. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருபதுக்குக் (20) குறையாத உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி கமத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றினை மேற்கொள்ளும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் ஐந்து (05) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

6. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி, தொழில் பயிற்சி மற்றும் முகாமைத்துவம், திறன்கள் அபிவிருத்தி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக மற்றும் ஆங்கிலப் பயிற்சி, கணக்கியல், சட்டமும் நிதியும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகச் செயற்பாட்டு புறவளக் கைத்தொழிலுக்கான கற்கை நெறிகள், தொழிலுக்கான ஆங்கிலம் ஆகிய கல்வித்துறைகளில் விசாலிப்புக் கூறினை அல்லது கூறுகளை நிறுவும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது ஏற்கெனவே உள்ளதொரு தொழில்முயற்சிக்கு விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I*<br>*ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை* | *நிரை II*<br>*விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 500 | 03 ஆண்டுகள் |
| 1000 | 05 ஆண்டுகள் |
| 1500 | 08 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

7. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில், தாதிமார் பயிற்சி, உணவு பதனிடுதல் கைத்தொழில் மற்றும் கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில் பயிற்சி ஆகிய கல்வித்துறைகளில் பொறுப்பு முயற்சியொன்றை மேற்கொள்ளும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது விசாலிப்புக்கூறை அல்லது கூறுகளை நிறுவும் தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I*<br>*ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை* | *நிரை II*<br>*விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 100 | 03 ஆண்டுகள் |
| 300 | 05 ஆண்டுகள் |
| 500 | 08 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

8. கீழே நிரை I இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் நிரை II இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையின் உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி, விடயத்துக்கேற்ப உற்பத்தி அல்லது சேவை அலகொன்றினை அமைப்பதுகொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதன் உற்பத்திகளை அல்லது சேவைகளை கிராமியத்துறைப் புறவளங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஏற்கனவே உள்ள அல்லது புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் கீழே நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I*<br>*முதலீடு* | *நிரை II*<br>*தொழிலாளர் எண்ணிக்கை* | *நிரை III*<br>*விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|---|
| ரூபா 15 மில்லியன் | 100 | 03 ஆண்டுகள் |
| ரூபா 20 மில்லியன் | 200 | 05 ஆண்டுகள் |
| ரூபா 30 மில்லியன் | 300 | 08 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டி லிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

9. 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் அதன் பணியாட்டொகுதியில் ஆகக் குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கும் அதே வேளையில், கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள ஏற்கனவே உள்ள தொழில் முயற்சி ஒன்று அதன் தொழிற்சாலை/ தொழிற்சாலைகளை கஷ்டமற்ற பிரதேசத்திலுள்ள ஓர் அமைவிடத்துக்கு மீளமைக்கும் விடயத்தில் ஐந்து (05) ஆண்டுக்காலப் பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

அத்தகைய தொழில்முயற்சி அதன் ஆளணியில் ஆகக்குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்கான தொழில்பேணும் அதேவேளையில் தனது மீளமைக்கப்பட்ட தொழிற்சாலை/தொழிற்சாலைகளில் சேர்க்கப்படாத அல்லது தொழில் வழங்கப்படாத அதன் ஆளணியினருக்கு அக்காலகட்டத்தில் அமுலில் இருக்கும் தொழிற் சட்டங்களுக்கேற்ப சேவை முடிவுப் பயன்களை வழங்கவேண்டும்.

சொல்லப்பட்ட கால விலக்களிப்புப் பகுதி சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் "ஆ"

1 முதல் 9 வரையான விடயங்கள், சபையினால் கஷ்ட பிரதேசமொன்றென வகுக்கப்படும் (கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைத் தவிர்ந்த) ஏதுமொரு பிரதேச செயலகப் பிரிவுப் பிரதேசமொன்றில் பொறுப்பு முயற்சியொன்றை நிறுவும் தொழில் முயற்சியொன்றுக்கு மாத்திரம் ஏற்புடைத்தாகும்.

1. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் கீழே நிரை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய எண்ணிக்கையிலான உள்நாட்டு ஆட்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்குவதோடு (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தியை அல்லது சேவைகள் வழங்கலை மேற்கொள்ளும் பொறுப்பு முயற்சியொன்றினை நடாத்தும் புதியதொரு தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| நிரை I<br>தொழிலாளர் எண்ணிக்கை | நிரை II<br>விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|
| 200 மற்றும் அதற்கு மேல் | 08 ஆண்டுகள் |
| 100 - 199 | 05 ஆண்டுகள் |
| 50 - 99 | 03 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

2. முப்பது மில்லியன் ரூபாவுக்குக் (ரூபா 30,000,000) குறையாத முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் உள்நாட்டுச் சந்தைக்காக (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்காக நலிவடைந்துள்ள

கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலில் தற்கால எண்ணிக்கையிலான ஊழியர்களைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துதல் அல்லது இருநூறுக்குக் (200) குறையாத உள்நாட்டு ஆட்களைத் தொழிலில் அமர்த்தல் ஆகிய இவற்றுள் எது அதிகமோ அத்தகைய எண்ணிக்கையுடன் புதிய தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் ஐந்து (05) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமான வரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

3. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் கீழேயுள்ள நிரை I இற்கு நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறான உள்நாட்டு ஆட்களுக்கு தொழில் வழங்கி தைத்த ஆடைகள் உற்பத்திக்கானதொரு பொறுப்பு முயற்சியை மேற்கொள்ளும் மற்றும் அதன் உற்பத்திகளில் எண்பது சதவீதத்தக்குக் (80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் நிரை II இல் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I* *தொழிலாளர் எண்ணிக்கை* | *நிரை II* *விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 200 - 299 | 08 ஆண்டுகள் |
| 1000 - அதற்கு மேல் | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

4. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருநூறு (200) அல்லது அதற்குக் கூடிய உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்கான நலிவடைந்துள்ள கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் கைத்தொழில் பொருள் உற்பத்தியாயின் அதன் உற்பத்தியில் எண்பது சதவீதத்தக்குக் (80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் அல்லது சேவைகளை வழங்குவதாயின் எழுபது சதவீதத்துக்கு (70%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I* *தொழிலாளர் எண்ணிக்கை* | *நிரை II* *விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 200 - 299 | 08 ஆண்டுகள் |
| 1000 - அதற்கு மேல் | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

5. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருபதுக்குக் (20) குறையாத உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி கமத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றினை மேற்கொள்ளும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் எட்டு (08) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

6. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி, தொழில் பயிற்சி மற்றும் முகாமைத்துவம், திறன்கள் அபிவிருத்தி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக மற்றும் ஆங்கிலப் பயிற்சி, கணக்கியல், சட்டமும் நிதியும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகச் செயற்பாட்டு புறவளக் கைத்தொழிலுக்கான கற்கை நெறிகள், தொழிலுக்கான ஆங்கிலம் ஆகிய கல்வித்துறைகளில் விசாலிப்புக் கூறினை அல்லது கூறுகளை நிறுவும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது ஏற்கனவே உள்ளதொரு தொழில் முயற்சி விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I*<br>*ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை* | *நிரை II*<br>*விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 500 | 05 ஆண்டுகள் |
| 1000 | 08 ஆண்டுகள் |
| 1500 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

7. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில், தாதிமார் பயிற்சி, உணவு பதனிடுதல் கைத்தொழில் மற்றும் கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில் பயிற்சி ஆகிய கல்வித்துறைகளில் பொறுப்பு முயற்சியொன்றை மேற்கொள்ளும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது விசாலிப்புக்கூறை அல்லது கூறுகளை நிறுவும் தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I*<br>*ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை* | *நிரை II*<br>*விலக்களிப்புக் காலப்பகுதி* |
|---|---|
| 100 | 05 ஆண்டுகள் |
| 300 | 08 ஆண்டுகள் |
| 500 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

8. கீழே நிரை I இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் நிரை II இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையிலான உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி, விடயத்துக்கேற்ப உற்பத்தி அல்லது சேவை அலகொன்றினை அமைப்பதுகொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதன் உற்பத்திகளை அல்லது சேவைகளை கிராமியத்துறைப் புறவளங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஏற்கனவே உள்ள அல்லது புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் கீழே நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| நிரை I<br>முதலீடு | நிரை II<br>தொழிலாளர் எண்ணிக்கை | நிரை III<br>விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|---|
| ரூபா 10 மில்லியன் | 75 | 05 ஆண்டுகள் |
| ரூபா 15 மில்லியன் | 100 | 08 ஆண்டுகள் |
| ரூபா 20 மில்லியன் | 225 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

9. 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் அதன் பணியாட்டொகுதியில் ஆகக் குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கும் அதே வேளையில், கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள ஏற்கனவே உள்ள தொழில் முயற்சி ஒன்று அதன் தொழிற்சாலை/ தொழிற்சாலைகளை கஷ்டமற்ற பிரதேசத்திலுள்ள ஓர் அமைவிடத்துக்கு மீளமைக்கும் விடயத்தில் எட்டு (08) ஆண்டுக்காலப் பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

அத்தகைய தொழில்முயற்சி அதன் ஆளணியில் ஆகக்குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்கான தொழில்பேணும் அதேவேளையில் தனது மீளமைக்கப்பட்ட தொழிற்சாலை/தொழிற்சாலைகளில் சேர்க்கப்படாத அல்லது தொழில் வழங்கப்படாத அதன் ஆளணியினருக்கு அக்காலகட்டத்தில் அமுலில் இருக்கும் தொழிற் சட்டங்களுக்கேற்ப சேவை முடிவுப் பயன்களை வழங்கவேண்டும்.

சொல்லப்பட்ட கால விலக்களிப்புப் பகுதி சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் "இ"

1 முதல் 9 வரையான விடயங்கள், சபையினால் அதிகஷ்ட பிரதேசமொன்றென வகுக்கப்படும் (கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களைத் தவிர்ந்த) ஏதுமொரு பிரதேச செயலகப் பிரிவுப் பிரதேசமொன்றில் பொறுப்பு முயற்சியொன்றை நிறுவும் தொழில் முயற்சியொன்றுக்கு மாத்திரம் ஏற்புடைத்தாகும்.

1. ஆகக் குறைந்த முதலீடான முப்பது மில்லியன் ரூபா (ரூபா 30,000,000) தொகையுடன் 2006 ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் கீழே நிரை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய

எண்ணிக்கையிலான உள்நாட்டு ஆட்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்குவதோடு (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தியை அல்லது சேவைகள் வழங்கலை மேற்கொள்ளும் பொறுப்பு முயற்சியொன்றினை நடாத்தும் புதியதொரு தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I* | *நிரை II* |
|---|---|
| *தொழிலாளர் எண்ணிக்கை* | *விலக்களிப்புக் காலப்பகுதி* |
| 200 மற்றும் அதற்கு மேல் | 10 ஆண்டுகள் |
| 100 – 199 | 08 ஆண்டுகள் |
| 50 – 99 | 05 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

2. முப்பது மில்லியன் ரூபாவுக்குக் (ரூபா 30,000,000) குறையாத முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் உள்நாட்டுச் சந்தைக்காக (தைத்த ஆடைகள் தவிர்ந்த) பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்காக நலிவடைந்துள்ள கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலில் தற்கால எண்ணிக்கையிலான ஊழியர்களைத் தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்துதல் அல்லது இருநூறுக்குக் (200) குறையாத உள்நாட்டு ஆட்களைத் தொழிலில் அமர்த்தல் ஆகிய இவற்றுள் எது அதிகமோ அத்தகைய எண்ணிக்கையுடன் புதிய தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் எட்டு (08) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமான வரி விதித்தல், செலுத்துதல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

3. முப்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூபா 30,000,000) குறையாத முதலீட்டுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் கீழேயுள்ள நிரை I இற்கு நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறான உள்நாட்டு ஆட்களுக்கு தொழில் வழங்கி தைத்த ஆடைகள் உற்பத்திக்கானதொரு பொறுப்பு முயற்சியை மேற்கொள்ளும் அதன் உற்பத்திகளில் எண்பது சதவீதத்துக்குக் (80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் பத்து (10) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

4. முப்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூபா 30,000,000) குறையாத தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருநூறு (200) அல்லது அதற்குக் கூடிய உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி பொருட்களின் உற்பத்தி அல்லது கைத்தொழில் உற்பத்தி அல்லது சேவைகள் வழங்கலுக்கான நலிவடைந்துள்ள கைத்தொழில் ஒன்றை அத்தகைய நலிவடைந்த கைத்தொழிலின் சொத்துக்கள் மற்றும் ஊழியர்களைக் கையேற்பதுடன் கைத்தொழில் பொருள் உற்பத்தியாயின் அதன் உற்பத்தியில் எண்பது சத வீதத்துக்குக்

(80%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் அல்லது சேவைகளை வழங்குவதாயின் எழுபது சதவீதத்துக்கு (70%) குறையாமல் ஏற்றுமதி செய்யும் புதியதொரு தொழில்முயற்சி ஒன்றின் விடயத்தில் பத்து (10) ஆண்டுக் காலப் பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

5. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் இருபதுக்குக் (20) குறையாத உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி கமத்தொழில் பொறுப்பு முயற்சியொன்றினை மேற்கொள்ளும் புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் பத்து (10) ஆண்டுக் காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

சொல்லப்பட்ட, விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

6. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி, தொழில் பயிற்சி மற்றும் முகாமைத்துவம், திறன்கள் அபிவிருத்தி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்காக மற்றும் ஆங்கிலப் பயிற்சி, கணக்கியல், சட்டமும் நிதியும் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகச் செயற்பாட்டு புறவளக் கைத்தொழிலுக்கான கற்கை நெறிகள், தொழிலுக்கான ஆங்கிலம் ஆகிய கல்வித்துறைகளில் விசாலிப்புக் கூறினை அல்லது கூறுகளை நிறுவும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது ஏற்கனவே உள்ளதொரு தொழில் முயற்சி விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| நிரை I<br>ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை | நிரை II<br>விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|
| 300 | 05 ஆண்டுகள் |
| 500 | 08 ஆண்டுகள் |
| 750 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

7. ஆகக் குறைந்த முதலீடான பதினைந்து மில்லியன் ரூபா (ரூபா 15,000,000) தொகையுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுக் காலப்பகுதியொன்றினுள் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழில், தாதிமார் பயிற்சி, உணவு பதனிடுதல் கைத்தொழில் மற்றும் கமத்தொழில், பெருந்தோட்டக் கைத்தொழில் பயிற்சி ஆகிய கல்வித்துறைகளில் பொறுப்பு முயற்சியொன்றை மேற்கொள்ளும் அத்துடன் அது கீழே நிரை I இல் உள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஆட்களின் எண்ணிக்கைக்கு ஆண்டொன்றுக்குப் பயிற்சியினை வழங்கும் புதியதொரு தொழில்முயற்சி அல்லது விசாலிப்புக்கூறை அல்லது கூறுகளை நிறுவும் தொழில்முயற்சியொன்றின் விடயத்தில் கீழே நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I* ஆண்டொன்றுக்கு பயிற்றப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை | *நிரை II* விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|
| 75 | 05 ஆண்டுகள் |
| 150 | 08 ஆண்டுகள் |
| 250 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எந்த ஆண்டு முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும்.

8. கீழே நிரை I இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முதலீடொன்றுடன் 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் நிரை II இன் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையின் உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கி, விடயத்துக்கேற்ப உற்பத்தி அல்லது சேவை அலகொன்றினை அமைப்பதுகொண்டு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதன் உற்பத்திகளை அல்லது சேவைகளை கிராமியத்துறைப் புறவளங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் ஏற்கனவே உள்ள அல்லது புதியதொரு தொழில்முயற்சி விடயத்தில் கீழே நிரை III இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பில் வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

| *நிரை I* முதலீடு | *நிரை II* தொழிலாளர் எண்ணிக்கை | *நிரை III* விலக்களிப்புக் காலப்பகுதி |
|---|---|---|
| ரூபா 10 மில்லியன் | 50 | 05 ஆண்டுகள் |
| ரூபா 12 மில்லியன் | 100 | 08 ஆண்டுகள் |
| ரூபா 15 மில்லியன் | 200 | 10 ஆண்டுகள் |

சொல்லப்பட்ட விலக்களிப்புக் காலப்பகுதி, தொழில்முயற்சி இலாபங்களை ஈட்டத் தொடங்கும் அல்லது வர்த்தகச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் திகதியில் இருந்து கணக்கிடப்படும் இரண்டு (02) ஆண்டுகளுக்குப் பிந்தாத ஏதும் ஒரு வரி மதிப்பீட்டாண்டிலிருந்து, இவற்றுள் எது முந்தியதோ, அதிலிருந்து கணக்கிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே உள்ளதொரு தொழில்முயற்சியின் விடயத்தில் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து விலக்களிப்புக் காலப்பகுதி கணிக்கப்படுதல் வேண்டும்.

9. 2006 ஏப்பிறல், 1 ஆந் தேதியில் இருந்து இரண்டு (02) ஆண்டுகள் காலப்பகுதியொன்றினுள் அதன் பணியாட்டொகுதியில் ஆகக் குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்குத் தொழில் வழங்கும் அதே வேளையில், கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள ஏற்கனவே உள்ள தொழில் முயற்சி ஒன்று அதன் தொழிற்சாலை/ தொழிற்சாலைகளை கஷ்டமற்ற பிரதேசத்திலுள்ள ஓர் அமைவிடத்துக்கு மீளமைக்கும் விடயத்தில் பத்து (10) ஆண்டுக்காலப் பகுதியொன்றுக்கான இலாபங்கள் வருமானம் தொடர்பாக வருமானவரி விதித்தல், செலுத்தல் மற்றும் அறவிடுதல் தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தனவாதல் ஆகாது.

அத்தகைய தொழில்முயற்சி அதன் ஆளணியில் ஆகக்குறைந்தபட்சம் இருநூறு (200) உள்நாட்டு ஆட்களுக்கான தொழில்பேணும் அதேவேளையில் தனது மீளமைக்கப்பட்ட தொழிற்சாலை/தொழிற்சாலைகளில் சேர்க்கப்படாத அல்லது தொழில் வழங்கப்படாத அதன் ஆளணியினருக்கு அக்காலகட்டத்தில் அமுலில் இருக்கும் தொழிற் சட்டங்களுக்கேற்ப சேவை முடிவுப் பயன்களை வழங்கவேண்டும்.

சொல்லப்பட்ட கால விலக்களிப்புப் பகுதி சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்.

6- 394

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.